13th August 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்னால் சொன்னபடி, கலெக்டர் ஸ்பெஷல் ஆபீசராக இருப்பதனால், இதை ஒரு முக்கிய வேலையாகக் கருதவில்லை. ஆனால் இப்பொழுது இது ஒரு முக்கிய மான காரியம் என்று சர்க்கார் எல்லா கலெக்டர்களுக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறது.

Children's Theatre

* 152 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள பாலர் தியேட்டர் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை எவ்வளவு வசூல் செய்யப்பட்டது?

(ஆ) அதற்காக ஆன செலவு எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) சென்ற மே மாதம் முடிய ரூபாய் 39,187·37 வசூல் செய்யப்பட்டது.

(ஆ) ரூபாய் 38,338.03 அதற்காக செலவானது.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்ற பாலர் அரங்கங்கள் படங்கள் காட்டுவதற்கு ஜில்லாவுக்கு ஒன்றாக அல்லது முதல் கிரேட் முனிசிபாலிடிக்கு ஒன்றாக ஆரம்பிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குத் திட்டம் எதுவும் இல்லை.

SRI A. GOVINDASAMY : குழந்தைகளுக்கு வேண்டிய படங்களை அரசாங்கம் தயாரித்திருக்கிறதா? இல்லாவிட்டால் அவ்வாறு தயாரிக்க முயற்சி எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் இந்த சொசைடி படம் எடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு ஏற்பாடு செய்திருக்கிறது. மத்திய சர்க்கார் தயாரித்திருந்த படங்களும் வெளிநாட்டிலிருந்து குழந்தைகளுக்காக எடுக்கப்பட்ட படங்களும் இந்த அரங்கில் காண்பிக்கப்படுகின்றன.

SRI A. A. RASHEED : Is there any proposal to allow dramas and cultural shows to be conducted in this theatre?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் இந்த அரங்கம் உபயோகிக்கப்படாத காலத்தில், அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து அனுமதி கொடுக்கிறோம்.

Electrification of the houses of plantation labourers

* 153 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தேயிலை, காப்பித் தோட்டங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களுடைய குடியிருப்பு வீடுகளுக்கு மின்சார விளக்குகள் போடப்படுவது பற்றி அரசாங்கம் பரிசீலனை நடத்துகிறதா?

(ஆ) அப்படியாயின், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM: தேயிலை, காப்பித் தோட்டங்களில் உள்ள பங்களாக்களில் மின்சார லைட்டுகள் கொடுக்கப்படுகின்றன. முதலாளிகளிடம் சொல்லி தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய இல்லங்களிலே மின்சார லைட்டு போட மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: உத்தரவு போடவில்லை என்று தான் சொன்னேன். முதலாளிகளிடம் சொல்லி வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

SRI J. MATHA GOWDER: தேயிலைத் தோட்டங்களில் அனுமதிக்கப்படுகிற மின்சார யந்திரங்களுக்கு இவ்வளவு யூனிட், வீடுகளுக்கு இவ்வளவு என்று மின்சார இலாக்கா சொல்லுவதால் அவ்வளவையும் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடியாமல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் மின்சார இலாகா அமைச்சர் தொழிலாளர் வீடுகளுக்கும் உபயோகப்படுத்த அனுமதிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: அவர்களுக்கே இந்தக் கேள்வியைப்போட்டால், நன்றாக பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

Strike by taxi drivers

* 154 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Baby Taxi Owners' Association have represented to the Government for adequate police protection during the recent taxi strike; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that during the recent strike, several owner-driven taxis were stoned and damaged, and if so, may I know what protection was given to owner-driven taxis?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question was with reference to request made by the Taxi Owners' Association. The answer was that there was no such request. A general assurance was given to all taxi owners that police protection would be given if sought for.

Chemical industries

* 155 *Q.*—SRI P. G. MANICKAM (on behalf of SRI A. VEDARATHNAM): கனம் கைத்தொழில் அமைச்சா அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ரசாயனத் தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?